<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 56/2026</u>
<u>வழக்கு சாட்சி PW–8</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அனுஷா மனோகரி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முருகையா | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | மதுரை | வயது | : | 56 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Friday of 07.08.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. சாட்சி காணொளி மூலம் ஆஜரானார். )**

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது அவனியாபுரம் காவல் நிலையத்தில் காவல்ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கே.வி.நல்லூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 28.07.2017 ம் தேதி காவல் நிலைய குற்றஎண்.214/2014 வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு,

அதே தேதி, 12.00 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் வெள்ளத்துரை மற்றும் வேலுச்சாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6** ஆகும். மேலும் சம்பவயிடத்தில் அதே சாட்சிகள் முன்னிலையில் இரும்பு கம்பி,

கல்தூணிலிருந்து எடுக்கப்பட்ட கல் ஒன்று ஆகியவற்றை 13.00 மணிக்கு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். பின்னர், சாட்சிகள் ராஜேந்திரன், குருவைய்யா, செந்தூர், முத்துப்பாண்டியன், வெள்ளத்துரை, வேல்ச்சாமி மற்றும் தலைமைக்காவலர் சுடலை ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், அதே தேதியில் 14.30 மணியளவில் வழக்கின் எதிரியை கீழகுன்னக்குடி, சோப்பு கம்பெனி முன்பு வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

பின்பு, கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.7** ஆகும். கைப்பற்றப்பட்ட இரும்பு கம்பி ஒன்று – அ.சா.பொ.1 ஆகும். கல்தூணிலிருந்து எடுக்கப்பட்ட கல் ஒன்று – அ.சா.பொ.2 ஆகும்.

பின்னர் 24.01.2017 அன்று செல்வன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சேதமதிப்பு சான்றிதழ் பெற்றேன். அந்த சேதமதிப்பு சான்றிதழ் அ.சா.ஆ.8 ஆகும்.

பின்னர், சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், விசாரணையின் அடிப்படையிலும் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 506(2) IPC மற்றும் Sec 3 of TNPPDL Act வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

இல்லை.

சாட்சி மதுரை மாவட்டம், அவுனியாபுரம் காவல் நிலையம் காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Maheshkumar,S.S.I., என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.08.10 10:57:13 +0530